# DEPOSITION OF WITNESS
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 265/2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW1
Defendant :
Court :

Name : தேவி
Father's/
Husband Name : **பாண்டி**
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

27.02.2026. **CC.No.265/2022** அ.சா.1 தேவி

(எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**<u>முதல் விசாரணை</u>:**

நான் கழுவர்கடை காலணியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 3 ராக்கு என்பவர் எனது மாமியார் ஆவார். ஆஜர் எதிரி ஊமையன் என்ற முத்து இருளனை எனக்கு தெரியும். கடந்த 09.09.2021 அன்று எனது மாமியார் ராக்கு என்பவர் கழுகர்கடை எதிர்புறத்தில் வைகை ஆற்றங்கரையில் எருமை மாடு மேய்பதற்காக சென்றார். தினந்தோறும் நான்தான் அவரை நான் அங்கு சென்று கூட்டிக்கொண்டு வருவேன். மேற்சொன்ன தேதியில் வெகுநேரம் ஆகியும் எனது மாமியார் வீட்டிற்கு திரும்ப வரவில்லை. கருப்பையா மனைவி சமயமுத்து என்பவர் இது சம்மந்தமாக கேட்டபோது அவர் தெரியவில்லை என கூறிவிட்டார். நான் எனது மாமியாரை தேடி மேற்சொன்ன ஆற்றுக்குள் சென்றேன். அப்போது அதிகரைக்கு செல்லும் வழியில் பாதையில் எனது மாமியார் தண்ணீருக்குள் கிடந்தார்கள். நான் சென்று பார்த்தபோது எனது மாமியாருக்கு இடது மற்றும் வலது கைகளிலும், நெற்றி,

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.27 19:02:10 +0530

புருவம் மற்றும்  தோள்பட்டையில் காயம் ஏற்பட்டிருந்து. எனது மாமியாருக்கு மண்டை உடைந்து ரத்தம் வடிந்த நிலையில் இருந்தது. நான் தண்ணீருக்குள் இருந்து எனது மாமியாரை துாக்கி என்ன நடந்தது என்று கேட்டபோது அப்போது எனது மாமியார் ஆஜர் எதிரி முத்து இருளன் என்பவர் எனது மாமியாரை பார்த்து சைகையால் எனது மாமியாரை திட்டி ஏண்டி இங்க வந்து மாடு மேய்க்கிற என்று சைகையால் திட்டி கம்பால் எனது மாமியாரை அடித்தும் காலால் எட்டி தண்ணீருக்குள் தள்ளிவிட்டதாக கூறினார். நான் உடனே எனது கணவர் பாண்டிக்கு போல் மூலம் இந்த சம்பவம் பற்றி தெரியப்படுத்தினேன். நான் சம்பவம் இடம் சென்று எனது மாமியாரை பார்த்த போது மாலை 05.00 மணியாகும். எனது கணவர் உடனே ஆட்டோவுடன் வந்து திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது மாமியாரை அழைத்து சென்றோம். அங்கு எனது மாமியாருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்கு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது மாமியார் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அங்கு எனது மாமியாருக்கு இடது முறிவு ஏற்பட்டதற்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். மேற்படி மருத்துவமனையில் எனது மாமியார் சுமார் 12 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்.சம்பவம் தொடர்பாக திருப்புவனம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சம்பவம் பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**:

சம்பவம் நடந்து எத்தனை நாள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் மறுநாள் புகார் கொடுத்தேன். புகார் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் திருப்புவனம் காவல் நிலையத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. புகாரானது ஒரு நாள் கால தாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் எனது மாமியாரை திருப்புவனம் அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சேர்த்தோம் என்றால் மாலை 06.30 மணியளவில் சேர்த்தோம். மருத்துவமனையில் எனது மாமியாரை யார் சேர்த்தார் என்றால் நான் தான் சேர்த்தேன். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் மாலை 05.00 மணியளவில் நடைபெற்றது. நான் பார்க்கும்போது எதிரி வெகுதுாரம் சென்றுவிட்டார் என்றால் சரிதான். எதிரியை நான் பார்க்கும்போது அவர் எவ்வளவு தொலைவில் இருந்தார் என்றால் அரை கிலோ மீட்டர் துாரத்தில் இருந்திருப்பார். வழக்கமாக நான் தான் எனது மாமியாரை மாடு மேய்க்க அழைத்து சென்றுவிட்டு கூட்டிவருவேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு அவ்வாறு அழைத்து வருவேன் என்றால் எப்பொழுதும் மாலை 04.00

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.27 19:02:18 +0530

மணி அளவில் அழைத்து வந்துவிடுவேன். அன்று 05.00 மணி வரை அவர் வரவில்லை. அன்றைக்கு ஏன் நான் 04.00 மணியளவில் அழைக்க செல்லவில்லை என்றால் நான் எப்பொழுதும் மாடு மேய்க்கிம் இடத்திற்கு உள்ளே செல்ல மாட்டேன். நான் மெயின் ரோட்டில் நிற்பேன். நின்று அழைத்து செல்வது வழக்கம். மாடு மேய்க்கும் இடமான ஆற்றங்கரை பகுதியில் மது அருந்திவிட்டு நிறைய பேர் இருப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அங்கே மது அருந்துபவர்கள் வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அங்கு செல்லமாட்டேன். அந்த ஆற்றங்கரை பகுதியில் நிறைய குற்ற சம்பவங்கள் நிகழும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிகழ்வுகள் நடைபெறுவது குறித்து எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் நான் எழுதவில்லை என்றால் சரிதான். புகார் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் எதிரியின் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஊமையன் என நான் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு அவரை அழைப்பார்கள். போலீசார் எத்தனை நாள் கழித்து என்னை எங்கே வைத்து விசாரித்தார்கள் என்றால் 3 நாட்கள் கழித்து சம்பவம் நடைபெற்ற ஆற்றுக்குள் வைத்து என்னை விசாரித்தார்கள். பொதுவாக எங்கள் ஊரில் ஆடு, மாடுகள் மேய்க்க அழைத்தால் சேர்ந்து செல்வது வழக்கம் என்றால் சரியல்ல. எனது மாமியாருடன் எங்கள் ஊரைச் சேர்ந்த சமயமுத்து மாடு மேய்க்க செல்வது வழக்கம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு தோப்பு நிலங்கள் எதுவும் கிடையாது என்றால் அவரை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அவர் அடித்தது மட்டும் தான் தெரியும். ஆஜர் எதிரியால் எனது மாமியார் தாக்கப்படவில்லை என்றாலும் அதனால் எனது மாமியாருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது மாமியார் தண்ணீரில் கிடந்ததாக சொல்லியுள்ள நிலையில் அதன் ஆழம் எவ்வளவு இருக்கும் என்றால் 4 அடி ஆழம் இருக்கும். இரத்தம் படிந்ததாக சொல்லப்படும் எனது மாமியாரின் உடைகளை போலீசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் ஒப்படைக்கவில்லை. எனது மாமியாரை இந்த ஆற்றங்கரையில் இருந்த யாரோ ஒருவர் மது அருந்திவிட்டு தள்ளிவிட்டார் என்றாலும் ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரி பேச இயலாத மாற்றுத்திறனாளி என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு உடல் அளவில் மற்றவர்களை தாக்கும் அளவிற்கு பலம் பொறுந்தியவர் அல்ல என்றால் சரியல்ல. அதனால் அவர் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.27 19:02:59 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.